# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**STC.No.120/2024**

Deposition of Witness of PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : சுரேஷ் | Calling | : |
| Father/Husband's Name | : ஆறுமுகம் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 07th May 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் ஈரோடு ஓடைப்பள்ளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட சென்டரிங் வேலை செய்து வருகிறேன். கடந்த் 08.03.2023 ம் தேதியன்று காலை 6.00 மணியளவில் நானும், முருகன், ராஜேஸ் ஆகியோர் ஊத்துக்குளிக்கு அருகில் உள்ள ஒரு கட்டிடத்திற்கு வேலை செய்துவதற்காக வந்தோம். வேலை செய்து விட்டு காலை 9.30 மணியளவில் நஞ்சை ஊத்துக்குளியில் ஈரோடு டூ முத்துார் மெயின் ரோட்டில் உள்ள பாலமுருகன் ே ஹாட்டலில் சாப்பிட வந்தோம். சாப்பிட்டு விட்டு ராஜேஸ் வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து ஒரு வாகனத்திலும், மற்றொரு வாகனத்தில் முருகன் வாகனத்தை எடுத்துக் கொண்டு ே ஹாட்டலில் இருந்து ரோட்டிற்கு வந்து ஈரோட்டிற்கு செல்ல திரும்பிய போது ஈரோட்டில் இருந்து சுபாஷ் என்பவர் பல்சர் பைக்கில் அதிவேகமாக வந்து முருகன் மீது மோதிவிட்டார்.

2. வாகனம் மோதியவுடன் முருகனுக்கு கால் முறிந்துவிட்டது. உடனே 108 ஆம்புலன்ஸ்-க்கு போன் செய்தோம். காவல்நிலையத்திற்கும், முருகனின் மனைவிக்கும் தகவல் சொன்னோம். ஆம்புலன்ஸ் வந்தவுடன் முருகனை ஏற்றி ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய பல்சர் பைக்கை ஓட்டி வந்த நபர். பின்பு தனியார் மருத்துவமனையில் முருகன் சிகிச்சை எடுத்து வந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.05.07 17:13:11 +0530

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் காயம்பட்ட முருகன் ஈரோடு பெரும்பள்ளம் ஓடையை சேர்ந்தவர் என்றால் சரிதான். நானும் அதே ஊரை சார்ந்தவர் என்றால் சரிதான். முருகன் எனக்கு உறவினரா என்றால் இல்லை, ஒரே வேலை செய்வதால் நண்பர் ஆவார். ஈரோடு டூ முத்துார் மெயின் ரோடு தென்வடல் ரோடு என்றால் சரிதான். 08.03.2023 ம் தேதி வேலையை நிறைவடைந்து விட்டதா என்றால் வேலை நேரத்தில் சாப்பிட வந்தோம். பாலமுருகன் ேஹாட்டல் தென்வடல் ரோட்டிற்கு கிழபுறமாக உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தின் போது நான் ராஜேஸ் வாகனத்தில் பின்னால் அமர்ந்து சுமார் 20 அடி துாரம் சென்றுவிட்டோமா என்றால் 20 அடி துாரம் தான் சென்றேன்.

2. நான் ேஹாட்டலில் இருந்து ஈரோடு ரோட்டில் வடக்கு நோக்கி சென்றோம் என்றால் சரிதான். நான் இருசக்கர வாகனத்தில் இருபக்கமும் கால்களை வைத்து அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். பல்சர் வாகனம் வடக்கிலிருந்து தெற்காக வந்தது என்றால் சரிதான். எங்கள் வாகனத்தை முந்தி சென்று தான் விபத்து நடந்தது என்றால் எங்களுக்கு எதிரே வந்த வாகனம் மோதி தான் விபத்து ஏற்பட்டது. நான் முருகனுக்கு முன் சென்றுவிட்டதால் விபத்து ஏற்பட்ட சத்தம் கேட்டு தான் திரும்பி பார்த்தேன் என்றால் சரிதான். 08.03.2023 ம் தேதியன்று நான் முருகனுடன் பாலமுருகன் ே ஹாட்டலுக்கு சாப்பிட சென்றதாகவும், விபத்து நடந்த சமயத்தில் நான் அங்கு இருந்ததாகவும், முருகன் எனது நண்பர் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. சம்பவத்தின் போது பல்சர் வாகனம் இடதுபுறமாக மெதுவாக வந்தது என்றும், முருகன் தான் வாகனத்தை கவனிக்காமல் வேகமாக ஈரோடு நோக்கி செல்ல வேண்டி வாகனத்தை திருப்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2 வாகனமும் நேருக்குநேர் மோதியது என்றால் முருகன் வாகனம் ரோட்டை கடக்கும் போது பல்சர் வாகனம் முருகன் வாகனத்தின் மத்தியில் மோதியது. ஆஜர் எதிரியை தற்போது தான் நீதிமன்றத்தில் முதன்முறையாக பார்க்கிறேன் என்றும், போலீஸார் அடையாளம் காட்டியதன் அடிப்படையில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அடிபட்ட முருகனின் நண்பர் என்பதால் அவரது குடும்பத்திற்காக நஷ்ட ஈடு பெறவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.05.07 17:13:19 +0530